[9th November 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : அது இருக்கட்டும். மெர்க்காராவில் அதிக மழை பெய்தாலும் நமக்குத் தொந்தரவாக இருக்கிறது, இல்லை என்றாலும் தொந்தரவாக இருக்கிறது. பழைய காலத்தில் கட்டப்பட்ட மேட்டூர் டாம் மட்டும் நமக்குப் போதாது. அதற்கு மேலோ, கீழோ வேறு ஒரு அணையையும் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : மேட்டூருக்கு மேலே கட்ட முடியாது. கீழே கட்ட ஒப்பந்த அடிப்படையில் நடவடிக்கை
9-30 a.m. நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் கூட மீண்டும் பரிசீலனைக்கு வருகிறது. ஆகவே இப்போது அதைக் குறித்து அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை.

திரு. சா. கணேசன் : மேட்டூருக்கு மேலே ஹொகனேக்கல் போன்ற இடங்களிலே கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்து ஏற்பட்டு அது ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அப்படியானால் அந்தக் கருத்து சரியென்று சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது மின்சார போர்டாரால் மின்சார உற்பத்திக்காக பரிசீலனை செய்யப்படுகின்ற திட்டம்.

Gang Mazdoors

* 564 *Q* —SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to make permanent the gang mazdoors who have put in more than three or five years of continuous service in the department of Highways and Rural Works; and

(*b*) if so, whether effective and immediate steps will be taken to finalise the same ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

அரிசி விநியோகம்

* 565 கேள்வி.—**திரு. இரா. நாராயணன்** : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் நகரைச் சேர்ந்த (சர்வ கட்சிக்காரர்கள்) பொது மக்கள் சார்பில், திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்களை அரியலூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் மூலம் 25—7—1966 தேதியன்று ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுக்கு அரியலூர் பஞ்சாயத்திற்கு மட்டும் மாதம் 1,000 (ஆயிரம்) மூட்டை அரிசியாவது விநியோகம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்களா?

9th November 1966]

(இ) ஆமெனில், இதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No representation was received by Collector through Revenue Divisional Officer, Ariyalur regarding the supply of rice to Ariyalur Town Panchayat. But during the visit of the Chief Minister to the area in July 1966 representations were made to him for supplying rice to the public of Ariyalur Town Panchayat. One hundred and eighty bags of rice, 50 tonnes of wheat, 10 tonnes of cholam per month were placed at the disposal of the Reveune DivisionalOfficer, Ariyalur for distribution. The issue was made at the rate of one Madras Measure of rice per family per week (with wheat and cholam) from July 1966. The arrangement is still in force.

Family Planning Programme

* 566 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have envisaged a revised and reorganised Family Planning Programme for the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) A copy of Government proceedings [a] No. 2460, Health, dated 8th December 1965 wherein the reorganised Family Planning Programme has been sanctioned for implementation is placed on the Table of the House.

திரு. கோ. சி. மணி : *தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் பிரகாரம் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இதை அமலாக்க வேண்டுமென்றும் அதற்கு ஒரு விழா வைத்துக் கொண்டாடி அதிகப்படியாக எங்கு செய்துகொள்கிறார்களோ அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்குப் பரிசு அளிப்பதாகக் கூறி அத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அங்கே இருக்கின்ற பீ.டீ.ஓ.-க்கள், மற்றவர்கள் எல்லாம் 60 வயதான கிழவர்கள், கல்யாணம் ஆகாதவர்கள் இவர்களையெல்லாம் கட்டாயப்படுத்தி குடும்பக் கட்டுப்பாடு செய்கின்ற முறைகளை மாற்றி, வேறு மாற்றுமுறைகளைக் கையாள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?*

கனம் சபாநாயகர் : *வேறு என்ன முறை இருக்கிறது?*

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *இந்த முறை நல்ல முறை. பிளாக் லெவலிலே, பஞ்சாயத்து யூனியன் லெவலிலே பிரசாரம் பண்ணுகிறார்கள். அதை எல்லோரும், கிழவர்களும், கல்யாணம் ஆகாதவர்களும் வந்து கேட்கிறார்கள். வயதிலேயோ அல்லது கல்யாணம் ஆகாதவர்கள் என்றோ இதிலே பாகுபாடு கிடையாது. கட்டுப்படுத்திக் கொள்வதற்கு யார் முன்வருகிறார்களோ அவர்கள் செய்துகொள்வார்கள்.*

---

[a] Printed as Appendix X on pages917–928